மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 8

பாடம் : புவியியல்

ஆக்கம் : M. N. F பஸ்லினா

கேஃவர/ நாங்கல்ல முஸ்லிம் மகா வித்தியாலயம்

தரம் : 11

## உலக சனத்தொகை

1. தற்போதைய சனத்தொகை வளர்ச்சி வேகத்தின் அடிப்படையில் வருடத்திற்கு எத்தனை மில்லியன் மக்கள் உலக மொத்த சனத் தொகையில் இணைகிறார்கள்?
2. மொத்த சனத்தொகையில் 76% ஆனோர் வாழும் கண்டங்கள் இரண்டும் எவை?
3. சனத்தொகைப் பருமனின் அடிப்படையில் முன்னணி வகிக்கும் 5 நாடுகளைப் பெயரிடுக?
4. அதிக சனத்தொகை கொண்ட 5 ஆசிய நாடுகளைப் பெயரிடுக?
5. உலக சனத்தொகை வளரச்சியில் தெளிவாக இனம் காணக்கூடிய பிரதான கட்டங்கள் இரண்டினையும் தருக?
6. அக்கால கட்டங்களில் சனத்தொகை வளர்ச்சியில் மாற்றங்கள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தியுள்ள காரணிகள் எவை?
7. “சனத்தொகை வெடிப்பு” என்றால் என்ன?
8. “சனத்தொகை அடர்த்தி” என்றால் என்ன?
9. உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்கள் எவை?
10. இப்பிரதேசங்களில் மக்கள் செறிவாக வாழ்வதற்கான காரணங்கள் யாவை?
11. உலகின் இரண்டாம் நிலைச் சனத்தொகை மையங்கள் 4 தருக?
12. உலகில் சனத்தொகை ஐதாக வாழும் பிரதேசங்கள் 4 தருக?
13. சனத்தொகையின் சமனற்ற பரம்பலின் மீது செல்வாக்குச் செலுத்தும் பௌதிகக் காரணிகள் யாவை?
14. சனத்தொகையின் சமனற்ற பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் மானிடக் காரணிகள் யாவை?